நாங்கள் காலதாமதத்திற்கு என்ன காரணம் என்பதை எல்லாம் விளக்கி இருக்கின்றோம். மத்திய அரசின் பங்கீட்டை மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றோம். கேட்டு வாங்கி விடுவோம், எந்த நிதியும் திரும்பிப் போகவில்லை, அதை மட்டும் நீங்கள் புரிந்துகொள்ளுங்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

59—

மின்சார தகன மேடை

***49125—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் மின்சார தகன மேடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் மதுரை சாலை மயானத்தில் எரிவாயு தகன மேடை அமைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.*

2020 பிப்ரவரி 20]

முற்பகல் 10–35

திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்து, குறிப்பாக, ஏழையெளிய மக்களுக்காக எண்ணற்ற பல நலத் திட்டங்களைத் தீட்டி, அதனைச் சிறப்பாக செயல்படுத்தி, இந்த மண்ணை விட்டு மறைந்தாலும் மக்கள் மனதைவிட்டு நீங்காமல், வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கண் வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு தமிழக மக்களுக்கு அம்மாவின் வழியிலே அம்மாவின் வழித் தோன்றலாக, அன்பின் பிறப்பிடமாய், ஆற்றலின் இருப்பிடமாய், பண்பின் சிகரமாய், அமைதியின் திருவுருவாய் (மேசையைத் தட்டும் ஒலி) திகழும் சேலத்து மாங்கனிபோல் தித்திக்கும் நல்ல பல திட்டங்களை வாரி வழங்கிக் கொண்டே, அதனைச் சிறப்பாகச் செயல்படுத்திக்கொண்டிருக்கும் குடிமராமத்து நாயகன், கொங்கு நாட்டுத் தங்கம், கழக இணை ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா திரு. எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

எங்கள் விருதுநகர் மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான விருதுநகர் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரியை வாரி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி மக்களின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன்.

'தமிழக மக்கள் எம் மக்கள், தமிழக நலனே என் நலன்' என்ற தாரக மந்திரத்தைக் கருத்தில்கொண்டு நிதிநிலை அறிக்கையினை, சிறப்பாகத் தயாரித்து, தமிழகம் ஏற்றம் பெறவும், தமிழக மக்களின் வாழ்வு வளம் பெறும் வகையில், அனைத்துப் பிரிவினரும் வரவேற்கும்விதமாக சிறப்பாக நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த ஜல்லிக்கட்டு நாயகர், தங்கத் தமிழ்மகன், (மேசையைத் தட்டும் ஒலி) தென்பாண்டி சிங்கம், கழக ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஐயா, திரு. ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகின்றேன்.

[2020 பிப்ரவரி 20

விருதுநகரில் விருதுநகர் மாவட்ட மக்களின் நலன் கருதி, நல்ல முறையில் அனைவருக்கும் மருத்துவ வசதி கிடைக்க வேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்தோடு, விருதுநகர் மாவட்டத்திற்கு தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வலியுறுத்தி, மருத்துவக் கல்லூரியைப் பெற்றுத் தந்த விருதுநகர் மாவட்டக் கழகத் தொண்டர்களின் பாதுகாவலரும், பால் வளத் துறை அமைச்சருமான, மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு அண்ணன் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் மின்சார தகனமேடை அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அதனை உடனே செயல்படுத்தித் தருமாறு அன்போடு கேட்டுக்கொண்டு நன்றிகூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றியே சொல்லிவிட்டார்கள். (சிரிப்பு)*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *அதை உடனே சொல்லிவிட்டார்கள்.(சிரிப்பு) மேற்படி நகராட்சிப் பகுதியில் மதுரை சாலை மயானம் மற்றும் கிருஷ்ணன் கோயில் தெரு மயானம் ஆகிய இரு மயானங்கள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த இரண்டு மயானங்களிலும் பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் உரிய சாலை வசதிகள், மின் விளக்குகள் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியின் மக்கள்தொகை 75,373 ஆகும். நகராட்சிப் பகுதியில் வாழும் மக்களில் சுமார் 80 சதவிகிதத்திற்குமேல் இந்த இரு மயானங்களையும் பயன்படுத்துகின்றனர். மீதமுள்ள 20 சதவிகிதம் மக்கள், நகராட்சி எல்லைக்கு அருகில், கிராம ஊராட்சிப் பகுதியில் அமைந்துள்ள மொட்ட பித்தான் தனியார் மயானம் மற்றும் மடவார்விளாகம், பெரியகுளம் கண்மாய் தென் பகுதி பொது மயானங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். மதுரை*

2020 பிப்ரவரி 20]

சாலை மயானத்தின் பரப்பளவு 7,041 சதுர கிலோ மீட்டராகும். இந்த மயானத்தை அதிகளவில் பொது மக்கள் பயன்படுத்தி வருவதாலும், அதற்கு போதுமான இட வசதி உள்ளதாலும் இந்த மயானத்தில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்க ஒரு கோடியே ஐந்து இலட்சம் ரூபாய் அளவிற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, விரைவாக பணி முடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள்.*

திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் எங்கள் கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகராட்சியில் மின்சார தகன மேடை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகராட்சியிலே எரிவாயு தகன மேடை அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். இயற்கை எய்தியவர்கள் திறந்தவெளியில் எரியூட்டப்படுவதால்,* Carbon dioxide, Carbon monoxide, Dioxin *போன்ற வாயுக்கள் வெளியேறி, சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்துகிறது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், எரியூட்டும் நேரத்தைக் குறைக்கவும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படுகின்றன. நவீன எரிவாயு தகன மேடைகள்மூலம் மழைக்காலங்களில்கூட திறம்பட எரியூட்ட இயலும். தமிழ்நாட்டில் சென்னை தவிர 135 நகர உள்ளாட்சிகளிலே, 98 நகர்ப்புற உள்ளாட்சிகள் தேர்வு செய்யப்பட்டு பல்வேறு திட்டங்களில் 116 நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்க 40 கோடியே 43 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில்*

தற்போது 113 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. கொடைக்கானல், பத்மநாபபுரம், செம்பாக்கம் ஆகிய மூன்று இடங்களில் 3 பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆம்பூர் நகராட்சியில் போதுமான இடவசதிகள் இருக்கின்றபட்சத்தில் கண்டிப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வருடம் உள்ளாட்சித் துறை வாயிலாக TNRRIS வாயிலாக உள்ளாட்சி சாலைகளுக்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. என்னுடைய ஒரே கோரிக்கை எந்தச் சாலைகளெல்லாம் அதிக அளவு பழுதடைந்துள்ளதோ, அந்தச் சாலைகளை priority அடிப்படையில் முதலில் அமைக்க வேண்டும் என்பதுதான். முக்கியமாக என்னுடைய தொகுதியில் உள்ள பாப்பாக்குடி ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊராட்சிச் சாலைகளும் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. அதேபோல தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக நல்லூரிலிருந்து குறுவன்கோட்டைக்கு கிட்டத்தட்ட 2,000 மாணவர்கள் அந்தச் சாலையில் போகின்றார்கள். ஆனால், இதுவரைக்கும் அந்தச் சாலைகள் அமைக்கப்படவில்லை. நான் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அரசுச் செயலாளரைப் பார்த்து கடிதம் கொடுத்துவருகிறேன். எந்தச் சாலைகள் அதிகம் பழுதடைந்துள்ளதோ, அந்தச் சாலைகளுக்கு நீங்கள் முன்னுரிமை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புச் சாலைகள் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கூறுகிறார்கள். மாண்புமிகு

2020 பிப்ரவரி 20]

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 2011 ஆம் ஆண்டு அமைந்த பிறகு ஊராட்சிச் சாலைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துவருகிறது. 2011 ஆம் ஆண்டுவரை, மொத்தமாக 1,02,000 கிலோமீட்டர் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 47,000 கிலோமீட்டர் சாலைகளைப் புதிய சாலைகளாகக் கண்டறிந்து அந்தச் சாலைகள் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளன. இதில் இந்தியாவிலேயே நம் மாநிலம்தான் முதலிடத்தில் இருக்கிறது. இதில் TNRRIS NABARD, *உள்ளிட்ட பல்வேறு நிதிகள்,* PMGSY– *பாரதப் பிரதமர் சாலை அமைப்புத் திட்டத்திலும்கூட (இதற்கு முன்னால் 2012 ஆம் ஆண்டு வரையிலும் நிதி வாங்கப்படவில்லை.) 2012 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து* funds–*ஐ வாங்கியிருக்கிறோம். இந்த முறையும் நிறைய சாலைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பாப்பாக்குடி ஊராட்சி, நல்லூர்–குறுவன்கோட்டை* school *சாலை என்று சொன்னீர்கள். அந்த இரண்டு சாலைகளும் கண்டிப்பாக உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று ஒன்றியச் சாலைகள் கண்டிப்பாக அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்படி கிராமச் சாலைகளுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்தார்களோ, அதேபோல மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் கிராமச் சாலைகளுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்துவருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். எங்களுடைய வேலூர் தொகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதேபோல, குடிநீர்* pipeline *திட்டமும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எல்லா ரோடுகளிலும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதேபோலே,* TWAD Board *குடிநீர்த் திட்டத்திலே பணி செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த*

[2020 பிப்ரவரி 20

pipeline போட்ட பின்னர், ரோட்டை மட்டம் அடிப்பதில்லை. Pipeline போடும்போது ரோடெல்லாம் மேடாக இருக்கிறது. அதேபோல பாதாள சாக்கடைத் திட்டத்தில் பணியாற்றும்போது அந்தத் திட்டத்தினால் ரோடெல்லாம் மேடும் பள்ளமுமாக இருக்கிறது. சாலையில் போகமுடியவில்லை, வரமுடியவில்லை. Two wheeler–ல் போக முடியவில்லை. அந்த அளவுக்கு பாதாள சாக்கடைத் திட்டத்திலும் TWAD Board குடிநீர்த் திட்டத்திலும் பணிசெய்துவருகிறார்கள். என் கடை எதிரிலும்கூட pipeline போட்டுவிட்டு, வண்டிகள் எல்லாம் எகிறி குதித்து railway station போவதுபோல் இருக்கிறது. Contractors உடனே ரோடு போட முடியாது என்றாலும், சாலையை மட்டப்படுத்தி சிறப்பாகச் செய்து கொடுத்தால் மக்கள் கார்களிலும், Two wheelers–லும் போவதற்கு வசதியாக இருக்கும். அதேபோல கிருஷ்ணா நகர், சத்துவாச்சாரி பகுதிகளிலெல்லாம் பாதாள சாக்கடைத் திட்டத்தினால் சாலைகள் பள்ளமாக இருக்கின்றன. நான் நிகழ்ச்சிகளுக்கு போகும்போது மக்கள் என்னிடத்திலே இந்தமாதிரி குண்டும் குழியுமாக இருக்கிறதே, பார்க்கிறீர்களா என்று கேட்கிறமாதிரி இருக்கிறது. அதேபோல மாநகராட்சியில் பார்த்தீர்களென்று சொன்னால் சுகாதாரப் பணிகளுக்காக மாதத்திற்கு 80 இலட்சம் ரூபாய் contract விட்டு அந்தப் பணிகளைச் செய்கிறார்கள். மாநகராட்சி main road–ல் குப்பையாக கிடக்கிறது. எந்தப் பணிகளும் செய்வதில்லை. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது smart city ஆக இருக்கின்ற வேலூர் மாநகராட்சியை daily சுத்தம் செய்ய வேண்டும். ரோடு பிறகுகூட போடட்டும். சாலையை மட்டம் அடித்து விட்டால் போதும். ஒரு சாலையில் பணி செய்த பின்னர் மற்ற பணியான பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. ஒரு தெரு வேலையை finish செய்துவிட்டு, அடுத்தத் தெருவுக்குப் போக வேண்டும். எல்லா ரோடுகளிலும் pipeline தோண்டிவிடுகிறார்கள். பொதுமக்கள் திட்டுகிறார்கள். அந்தப் பணிகளைச் செய்து முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

2020 பிப்ரவரி 20]

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வியாகும். மூலக் கேள்வி மின்சார தகன மேடை அமைப்பது குறித்ததாகும். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தொகுதி மக்களின்மீது கொண்டுள்ள அக்கறையின் காரணமாக இக்கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். நான், பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் குறித்து இதற்கு முன்பு பேசும்போதே சொல்லியிருக்கிறேன்.

பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை மேற்கொள்ளும்போது, அங்குள்ள மக்களுக்கு சில பிரச்சினைகள் ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. ஏனென்றால், இத்திட்டப் பணிகளைப் பொறுத்தளவிற்கு, பழைய நகரங்கள், பழைய ஊர்கள், வியாபாரப் பகுதிகள் ஆகியவற்றிற்கு மத்தியில்தான் pipeline–ஐக் கொண்டு போக முடியும். ஜன நெருக்கடி அதிகமுள்ள பகுதிகளில்தான் இத்திட்டத்தை செயல்படுத்த முடியும். அங்கேதான் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். அப்போது இதுபோன்ற சில இடர்ப்பாடுகள் ஏற்படுகின்ற சூழ்நிலைகள் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று, சில சாலைப் பணிகளை எடுத்தால், அப்பணிகளை முழுமையாக முடித்துவிட்டு, அடுத்த பணியை எடுக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கூறி, தனியாக கூட்டம் நடத்தி, ஒரு குழுவை அமைத்திருக்கிறோம். அதேபோன்று, பாதாளச் சாக்கடைத் திட்டப் பணியாக இருந்தாலும் சரி, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக மேற்கொள்ளப்படும் பைப்லைன் பதிப்பது உள்ளிட்ட குடிநீர்த் திட்டப் பணியாக இருந்தாலும் சரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கென சிறப்புத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். எப்படியென்றால், பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், main pipeline போட்டு முடித்த பிறகு, house connection–க்காக தனித்தனியாக சாலைகளைத் தோண்டி damage செய்வார்கள். இப்பணிகள் கிட்டத்தட்ட 6 மாதங்கள், 1 வருடம் என மேற்கொள்ளப்படும். எனவே, தற்போது, main pipeline போடும்போதே, திட்டத்தின் மூலமாகவே அரசு house connection–ஐ உடனடியாகக் கொடுத்துவிட்டு, பிறகு தவணை முறையில் தொகையினை வசூல் செய்கிறோம். இனி வருகின்ற காலங்களில்

1 சாலை, 2 சாலை பணிகளை எடுத்துக்கொண்டால், அப்பணிகளை முழுமையாக முடித்துவிட்டு, அடுத்த சாலையை பணிக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய திட்டத்தை இப்பொழுதுதான் கொண்டு வந்திருக்கிறோம். இத்திட்டம் விரைவாக அமல்படுத்தப்படும். இத்திட்டத்தை தற்போது செயல்படுத்தவிருக்கும் பணிகளில் சேர்த்துவிட்டோம். தற்போது நடைபெற்று வரும் பணிகள் பழைய பணிகளே தவிர, புதிய பணிகள் அல்ல. இனி நடைபெறும் பணிகள் மேற்காணும் வகையில்தான் நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மண்டலம் 8, வார்டு எண் 104–ல் உள்ள பிரிக்ளின் சாலையில் அமைந்துள்ள மயானமானது பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களை நல்லடக்கம் செய்த இடமாகவும், பல்வேறு சமூகப் போராளிகளை நல்லடக்கம் செய்த இடமாகவும் இருக்கின்றது. அந்த மின் மயானம் கடந்த ஒரு வருட காலமாகவே பழுதடைந்த நிலையில் இருக்கின்றது. அங்குள்ள புகை போக்கிகள் முற்றிலுமாக பழுதடைந்துள்ளதால், மின் மயானத்தின் கீழ்ப் பகுதியிலேயே, நல்லடக்கம் செய்யக்கூடிய இடத்திலேயே புகை பரவக்கூடிய சூழ்நிலை உள்ளது. இதனால், பல்வேறு நோய்கள் வருவதற்கான சூழ்நிலை உள்ள இடமாக அந்த மின் மயானம் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மின் மயானத்திலுள்ள மின் தகன மேடையை முழுமையாக நவீன வசதியுடன்கூடிய தகன மேடையாக மாற்றித் தருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், 199 மயான பூமிகள் பராமரிப்பில் இருக்கின்றன. அவற்றில், 25 எரிவாயு தகன மேடைகளாகவும்,

2020 பிப்ரவரி 20]

9 LPG தகனமேடைகளாகவும், *6* மின்சார தகனமேடைகளாகவும் நவீன முறையில் மாற்றியமைக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்கு முற்றிலும் இலவசமாகக் கொண்டுவரப்பட்டுள்ளன. மற்ற மயான பூமிகளில் பழைய முறைகளிலேயே தகனம் செய்யப்படுகிறது. அவையனைத்தும் படிப்படியாக மேம்படுத்தப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, மண்டலம் *8*, வார்டு *104*–ல் உள்ள மயான மேடை குறித்துச் சொன்னார்கள். துறை அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அவசியம் ஏற்படின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கண்டிப்பாக பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *60*, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

60—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

***38734—திரு. சு. ராஜேந்திரன்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, அரியலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், அரியலூரில் புதிய நீதிமன்றம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கான